பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6

# குறள்நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ.எம்.ஓ.எல்.பிஎச்.டி

**தேவை**

'குறள்நெறி' நாளிதழுக்குத் துணை ஆசிரியர் ஒருவரும், அச்சுக்கோப்பாளர்களும், அச்சுப்பொறியரும் (சிலிண்டர் மேன்) வேண்டப்படுகின்றனர். தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற ஊதியமளிக்கப்படும்.

செயலர்,
குறள்நெறி,
மதுரை—5

மலர் 1 | மதுரை ஐப்பசி உ௬ (11-11-66) வெளியூர் ஐப்பசி உஎ (12-11-66) | இதழ் 146

# கடவுளே! மன்னிக்காதீர்கள்!

## —சிலம்புச் செல்வர்

சென்னை நவ 10-

சென்னையில் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற அனைத்துக்கட்சிப் பொதுக்கூட்டத்தில் தமிழரசுக்கழகத்தலைவர் ம.பொ. சிவஞானம் பேசுகையில், "காங்கிரசார் என்ன செய்கிறோம் என்று தெரிந்து செய்கிறார்கள். மக்களைப் பட்டினி போடுகிறார்கள், ஆகவே! கடவுளே! இவர்களை மன்னிக்காதீர்கள்" என்று கூறினர்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்! காங்கிரசார் ஆட்சியில், உண்டி கெடுத்து உயிர் கெடுத்தார்கள்—மக்களை! அவர்கள் மட்டும் உண்டுகொழுத்திருக்கிறார்கள் ஆகவே உயிர் கெடுத்த கட்சி காங்கிரசு!

'பதவியில் எங்களுக்கு ஆசை இல்லை' என்கிறார்கள்! பஞ்சாபில் புதிதாக அமைச்சரவையில் 22 பேராம்! அது இன்னும் விரிவடையட்டும்—இன்னும் மூன்று மாதத்திற்குத்தானே!

காங்கிரசு ஆட்சியில் இனி மேல் சட்டமன்றம் நடக்காது அமைச்சரவைதான் நடக்கும் அந்த அளவுக்குப் பதவி வெறி!

இந்தக் கூட்டத்தில் வந்திருக்கிற காங்கிரசாரையும் கேட்டுக் கொள்வேன்—உங்களுக்கும் வாய் வயிறு இருக்கிறது; உங்களுக்கு மட்டும் விலைவாசி உயர்வு இல்லையா? ஆகவே, எங்கள் வேண்டுகோளுக்கு ஒத்துழைப்பு கொடுங்கள்; அல்லது சற்று விலகியாவது இருங்கள்!

அனைத்துக் கட்சி ஊர்வலம் நடத்தினால், எதிர் ஊர்வலம் நடத்தப் போவதாகக் கூறினார்களாம்! அப்படி நடத்த வேண்டும் என்பதுதான் எனது ஆசை! நாங்கள், சோறு 'போடு' என்று வந்தால், நீங்கள், 'போடாதே' என்று வருவீர்களா?

மனம் வருந்திச் சொல்கிறேன், ஏசுபிரான், கடவுளிடம் வேண்டுகிறபோது. கடவுளே! இவர்கள் 'என்ன செய்கிறோம்' என்று தெரியாமல் தவறு செய்கிறார்கள்; ஆகவே மன்னித்துவிடுங்கள், என்று வேண்டினாராம்.

காங்கிரசார், 'என்ன செய்கிறோம்' என்று தெரிந்து செய்கிறார்கள்! மக்களைப் பட்டினி போடுகிறார்கள்! ஆகவே கடவுளே! இவர்களை மன்னிக்காதீர்கள். இவ்வாறு ம.பொ.சி கூறினர். கூட்டத்தில் திரு. இரா. நெடுஞ்செழியன் க. ர. நல்லசிவம், (ச.சோ) எம். ஆர். வெங்கடராமன் (இ. பொ) மணலி கந்தசாமி (வ. பொ) அப்துல்சமது (லீக்) ஆகியோர் பேசினர்.

## நந்தா பதவியை இழந்தார்

புதுதில்லி, நவ. 9-

இந்தியக் கூட்டரசின் உள்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா தமது பதவியை விட்டு விலகினர். தலைமை அமைச்சர் இந்திராகாந்தி அவரது பதவி விலகலை ஏற்றுக் கொண்டார். காப்புத்துறை அமைச்சர் சவானை நந்தாவின் பொறுப்பை ஏற்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்திராகாந்தி காப்புத்துறை பொறுப்பை ஏற்று இரு துணையமைச்சர்களுடன் நடத்துவார் எனத் தெரிகிறது. நந்தாவின் பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ளார்.

அ. இ. கா. தலைவரின் விருப்பத்திற்கேற்ப இச்சிறு மாறுதல் செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதனல் மேலும் மாற்றங்கள் வேண்டியதில்லை எனக் கருதப்படுகிறது.

காங்கிரசுப் பாராளுமன்றச் செயற்குழுக் கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டுவதிலும் எல்லைக் காப்பிலும் நந்தா தவறிவிட்டார் என்று கூறி அவர் பதவி விலக வேண்டுமெனப் பல உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். திரு நந்தா இருமுறை இடைக்காலத் தலைமை அமைச்சராக இருந்துள்ளார் (நேருவும் சாத்திரியும் மறைந்த பொழுது) கூட்டரசு அமைச்சர்களில் நீண்டகால அமைச்சர் பதவியில் இருந்தவர். 1951-ல் பம்பாயில் தொழிலமைச்சராக இருந்த அவர் பின்னர் திட்டக் குழுவின் துணைத்தலைவரானர் பின்னர் உழவுத்துறை, மின்துறை, தொழில்துறை, வேலைவாய்ப்புத் துறைகளை ஆகிய துறைகளை மேற்கொண்டார்.

1963-ல் காமராசர் திட்டப்படி இலால்பகதூர் பதவியை விட்டு விலகியவுடன் திரு. நந்தா உள்துறை அமைச்சரானர். அதுமுதல் உள்துறை அமைச்சராகவே இருந்துள்ளார்.

திரு. நந்தா "சாதுக்கள்" சங்கத்தில் தொடர்பு கொண்டார். ஊழலை ஒழிப்பதற்குச் "சாது"க்களையும் 'சாது'க்கள் துணையையும் நாடினர். பசுக் கொலைத் தடுப்பில் 'சாதுக்களுடன் இணைந்து நின்றார். அச்சாதுக்கள் பசுத்தோல் போர்த்த புலிகளாக இருந்தமையால் அவர்கள் செயலாலேயே நந்தா பதவியை விட்டு விலக நேரிட்டது.

## "பொதுநல அமைப்பைவிட்டு இந்தியா வெளியேருது"

### சுவரண்சிங் அறிவிப்பு

புதுதில்லி நவ 9

அயல்நாட்டுத்துறை அமைச்சர் சுவரண்சிங் இந்தியா "பொதுநல அமைப்பை" விட்டு வெளியேறுமா எனக் கேட்கப்பட்ட பொழுது "வெளியேருது" என விடையளித்தார்.

"இந்தியா-பாக்கிசுத்தான் எல்லைச் சிக்கலின் போது பிரிட்டிசு இந்தியாவுக்கு எதிரான உணர்ச்சிகளைக் காட்டியதனலும், ரொடீசியச் சிக்கலைச் சரிவரத் தீர்க்காததாலும் "பொதுநல அமைப்பை விட்டு" வெளியேறுவது முறையானது" என்று கௌரி முரகரி (ச. சோ.) கூறினர்,

சுவரண்சிங் "பொதுநல அமைப்பை விட்டு வெளியேற வேண்டும்" என்று அரசு கருதவில்லை எனக் குறிப்பிட்டார்.

மாநிலங்களவையும், மக்களவையும் கூடிய கூட்டத்தில் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைமை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டதின் மூலம் இந்தியா பெற்ற பலனைக் குறிப்பிட்டார். "இணைந்த நட்புறவும் சிக்கல்களைப் புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் தங்கள் எண்ணங்களைப் பரிமாறக் கொள்ளவும் இம் மாநாடு உதவியது" எனக் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் இந்தியாவின் சார்பாளராகப் பங்கு கொண்ட சுவரண்சிங், படைக் குறைப்பு, அணுக்கருவிகளைப் பயன்படுத்தாமை, உரொடிசியச் சிக்கல், வியத்துநாம் சிக்கல் ஆகியவை பற்றி மாநாட்டில் தாம் ஆய்ந்ததாகக் குறிப்பிட்டார்.

இந்திய-பாகிச்தான் எல்லைச் சிக்கல் பற்றி மாநாட்டில் ஆய்வு நடத்தப் பாகிச்தான் முயற்சிகள் எடுத்துக் கொண்டதாகவும், அதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்ததும் அம்முயற்சிகள் கைவிடப்பட்டதாகவும் பாகிசுத்தானுக்கு எவரும் துணை நல்கவில்லையெனவும் குறிப்பிட்டார்.

### அறிவிப்பு

மழை-மின்னல் காரணமாக மின்னேட்டம் தடைப்பட்டு அச்சுப்பொறி இயங்கவில்லையாதலின் 10-11-66ஆம் நாள் இதழ் வெளிவந்ிலது என வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கின்றேம்.

—ஆசிரியர்,

# குறள்நெறி

தமிழ் வாழ்க

தி. வ. ஆண்டு 1997 ஐப்பசி 25 வியாழன் (11—11—66)


*எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை*
*அதிர வருவதோர் நோய்.* — ௪௨௯

# அந்தோ நந்தா!

திரு குல்சாரிலால் நந்தா இந்தியக்கூட்டரசு அமைச்சுத்துறையின் உள்துறையமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டார் என்ற செய்தி வந்துவிட்டது. "அரசறிய வீற்றிருக்கும் வாழ்வு ஆற்றங்கரையின் மரம் போன்றது. என்பது என்றும் உண்மைதான். மன்னர் ஆட்சியானாலும் மக்களாட்சியானாலும் மாண்புறு அமைச்சர் பதவி நிலையற்றதுதான். ஆனாலும் இந்தியக்கூட்டரசு அமைச்சுத்துறையில் இவர்தாம் நீண்டநாள் அமைச்சுத்துறையில் அமர்ந்துள்ளவர். எவரை விரும்பிப்போற்றினாரோ, எவர்க்குப் புகலிடம் அளித்துப் புரந்தாரோ எக்கொள்கைக்குப் பரிந்து உதவினாரோ, அவர்களும் அக்கொள்கையுமேதான் அவரது வீழ்ச்சிக்குக் காரணமாம்.

நேற்று முன்னாள் தில்லியில் நடந்த பசுக்கொலைத் தடுப்புக் கிளர்ச்சிக் கலகமே இவரைக் கீழிறக்கிவிட்டது.

காங்கிரசுப் பாராளுமன்றச் செயற்குழுக் கூட்டத்தில் பலர் சுட்டிக் காட்டியுள்ளதுபோல் 'சட்டத்தையும் ஒழுங்கையும் இவரால் நிலைநாட்ட முடியவில்லை. திறமையின்மைக்கு இவரே தகுந்த எடுத்துக்காட்டாவார்.

தில்லிக் கிளர்ச்சி பல நாட்களாகத் திட்டமிடப்பட்டது. அங்ஙனமிருந்தும் இவருக்குக் கீழ்ச் செயல்பட்ட ஒற்றர்துறை உளவறிதலில் தவறிவிட்டது. இன்றேல் இக்கிளர்ச்சி காற்றெடுபட்ட கனல்போல் மிகு விரைவில் பேரிழப்புக்களை உண்டுபண்ணி விடப்பட்டிராது. அ. இ. கா. தலைவர் இல்லம் தாக்கப்படும் அவலநிலை தோன்றியிராது. தக்கக் காவல் நடவடிக்கை எடுத்திருப்பின் அஞ்சத்தக்க இப்பெருங் கலகத்தை முளையிலேயே நசுக்கியிருக்கக்கூடும்.

இவருடைய மதிப்புக்குரிய 'சாது'க்களே பசுத்தோல் போர்த்த புலிகளாய் இருந்துள்ளனர். பசுக் கொலையைத்தடுக்க முயன்றோர் மக்கள் கொலைக்குத் திட்டமிட்டுள்ளனர்போல் தோன்றுகிறது. பசுக்கொலைத் தடுப்புப் போர்வையில் அஞ்சத்தகுந்த புரட்சிகளுக்கு ஆயத்தம் செய்துள்ளனர். இன்றைய ஆட்சிமீது வெறுப்புக் கொண்டவர்களும் இதில் கலந்திருக்க வேண்டும். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளை, கொலை செய்யும் கயவர்களும் இதில் ஈடுபடாமல் இருந்திரார். எப்படியோ விரும்பத்தகாதது, மக்களாட்சிக்கு ஊறு செய்வது நடந்துவிட்டது. உள்துறை தனது கடமையை நன்கு ஆற்றியிருப்பின் இதனைத் தடுத்திருக்க முடியும். கடமையில் தவறிவிட்டது.

'சாதுக்கள்' நடத்தும் இயக்கம் என நம்பி ஏமாற்றமுற்றுவிட்டார் நந்தா. தமிழ்நாட்டில் இந்தியெதிர்ப்புக் கிளர்ச்சி நடந்த காலத்தில் காட்டிய வன்கண்மை வடநாட்டுக் கிளர்ச்சிக்காரர்களிடம் காட்டுவது கிடையாது என்ற குற்றச்சாட்டு நந்தா மீது உண்டு. இனி நந்தா இடத்தில் அமர வருகின்றவர் நடுநிலை பிறழாது கடமையாற்றி நாட்டு மக்கள் நலத்தைப் போற்றி மக்களாட்சி மாண்புற உதவுவார் என நாடு எதிர்பார்க்கிறது.

நாட்டின் ஒற்றுத்துறை "வினைசெய்வார், தம்சுற்றம், வேண்டாதார் என்றாங்கு, அனைவரையும் ஆராய்வது ஒற்று" எனும் வள்ளுவர் வாய்மொழிக் கிணங்கத் தம் கடனாற்றுதலில் தவறுதல் கூடாது எனவும் அறிவுறுத்த விரும்புகின்றோம்.

## "செய்தி இதழ்களில் வெளிவந்த அறிக்கை தவறானதாகும்"

புதுதில்லி நவ 9-

நடுவண் எஃகுத்துறை அமைச்சர் டி. என். சிங் "விசாகப்பட்டினத்தில் உருக்காலை அமைக்கப்பட வேண்டும் என்று நடுவண் அமைச்சரவைத் துணைக்குழு பரிந்துரைத்ததாகச் செய்தி இதழ்களில் வெளிவந்தது தவறானதாகும்" என்று மாநிலங்களவையில் அறிவித்துள்ளார்.

"நடுவண் அமைச்சரவைத் துணைக் குழுவின் அறிக்கையாகச் செய்தி இதழ்களில் வெளிவந்தவை முழுக்க முழுக்கத் தவறானவையாகும்" என்று அவர் குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் விசாகப்பட்டினம் உருக்காலைக் கிளர்ச்சி பற்றி வெளியிட்ட ஓரறிக்கையில் அவர் இங்ஙனம் குறிப்பிட்டுள்ளார். தற்பொழுது அரசினரிடம் போதிய நிதி இருப்பு இல்லை எனவும், வேண்டிய வாய்ப்புக்கள் ஏற்படும் பொழுது எவ்விடத்தில் உருக்காலை ஏற்படுத்த வேண்டும் என அரசு முடிவெடுக்கும் எனவும் அவர் கூறினார்.

விசாகப்பட்டினத்தில் உடனடியாக எஃகாலை நிறுவப்பட வேண்டும் என்பது தங்கள் வேண்டுகோள் அன்று எனவும் வாய்ப்புக்கள் ஏற்படும் பொழுது விசாகப்பட்டினத்தில் எஃகாலை நிறுவப்படும் என உறுதிமொழி அளிக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் கேட்டுக் கொண்டனர்.

இவ்வேண்டுகோள் டி. என். சிங்கை இடுக்கணான நிலைக்கு ஆட்படுத்தியது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களோடு காங்கிரசு உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டு இவ்வேண்டுகோளை விடுத்தனர்.

அமைச்சர் உறுதிமொழி அளிக்க மறுத்தது உறுப்பினர்கட்கு மிகுந்த சீற்றத்தை ஏற்படுத்தியது.

அமைச்சர் பிற கேள்விகளுக்கு விடையளித்துக் கொண்டிருக்கையில் எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டனர். "அமைச்சரைப் பேசவிடாமல் கூச்சலிட்டால் அவை ஒத்திவைக்கப்படும்" என்று அறிவித்த பின்னரும் கூச்சல் அடங்கவில்லை. எனவே அமைச்சர் அமர்ந்துகொள்ள நேரிட்டது.

## கங்குலி தஞ்சைக்கு வருகை

(குறள்நெறிச் செய்தித் துறை)

தஞ்சை, நவ. 5—

கல்லூரி மாணவர்கள் வேண்டுகோளை நேரில் கேட்டறிய தென்னக 'இரயில்வே' உயர் அலுவலர் திரு. கங்குலி (General Manager, S. Rly.) அவர்கள் 5-11-66 இல் தஞ்சை வந்தார். தஞ்சைமாவட்ட தண்டல் நாயகம் திரு. இரங்கபாஷ்யம் இங்கு இவரைக் கண்டார். பின்னர் இருவரும், பூண்டிக் கல்லூரி முதல்வர் திரு. முருகனையும் அவருடன் வந்திருந்த மாணவர் சார்பாளர்களையும் கண்டு பேசினர். அப்போது மாணவர்கள், தஞ்சையிலிருந்து நாகூர் செல்லும் (பூண்டி வழியாக) வண்டி பழைய நேரமான காலை 9—15 க்கு புறப்பட வேண்டும் என்றும், நண்பகல் உணவு கொணரும் வண்டி கல்லூரி விடும் இடைநேரத்திற்குச் சரியாக வரவேண்டும் என்றும் தெரிவித்துக் கொண்டனர். 'தம்மால் இயன்றவரை விரைவில் இவ்வேண்டுகோளை நிறைவேற்ற முயற்சிக்கிறேன்' என்று உயர் அலுவலர் கூறினார். ஒரு வாரத்தில் இது நிறைவேறும் என மாணவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## பசுத்தோல் போர்த்த புலிகள் பாழாக்கினவை!

புதுதில்லி, நவ-9

தில்லியில் நடந்த பசுக் கொலைத் தடுப்புக் கிளர்ச்சியால் உண்டான இழப்பு ஏறக்குறைய ஒரு கோடிக்கு மேல் இருக்குமென மதிப்பிடப்படுகிறது. 250 மகிழ்வுந்துகளும், பல இயங்கு மிதிவண்டிகளும், மூன்று பொதுதுறைப் போக்குவரவு வண்டிகளும், அஞ்சல் வண்டிகளும் கொளுத்தப்பட்டவை. சிலருள் அடங்கும், பல புத்தம் புதியன. வெளிநாட்டிலிருந்து இப்பொழுதுதான் வந்தவை.

இவ்வாறு கொளுத்தப்பட்டவைகட்குக் காப்பீட்டுக் கழகம் இழப்பீடு நல்காதாம்!

★

## தமிழகக் கவிஞர் பெருமன்ற மாநில மாநாடு!

கோவை. நவ. 9-

இத்திங்கள் இறுதி வாரத்தில் தமிழகக் கவிஞர்கள் பெருமன்ற மாநிலமாநாடு கோவை நகரில் நடைபெறும். அதற்கெனச் சிறப்பான ஏற்பாடுகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

இம்மாநாட்டில் தமிழகத்தில் உள்ள கவிஞர்கள் அனைவரும் கலந்து கொள்வர். பாடல்கள் அரங்கேற்றப்படும். இதனையொட்டிச் சிறப்புமலர் ஒன்றை வெளியிட முடிவு செய்தனர்.

இது சாறும் இம்மன்றத்தில் உறுப்பினராகத் தம்மைப் பதிப்பித்துக் கொள்ளாத கவிஞர்கள் உறுப்பினர் கட்டணம் உரு 1-ம் ஆண்டுக் கட்டணம் உரு 3-ம் கவிஞர் கி. அரங்கசாமி செயலர் தமிழ்க் கவிஞர் பெருமன்றம் இராசிபுரம், சேலம். என்ற முகவரிக்கனுப்பிப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

O

## தேனியில் தி. மு. க. இன்னிசை நிகழ்ச்சி

தலைவர்: கே.பி.பி.எம். நாராயணசாமி
இடம்: மேற்குச் சந்தை
நாள்: 16—11—66 புதன் கிழமை மாலை 6 மணி
பாடுவோர்:
மசீத் — ராசகுமாரி குழுவினர்
கருத்தாழம்மிக்கக் கழகப் பாடலும் உரையாடலும் பல குரலில் பாடுவார்கள்.
பொருள்:
நோட்டும்-ஓட்டும் சந்திப்போம் 67-ல்
இவ்வண்
நகர் திராவிட முன்னேற்ற கழகம் கிளை—தேனி.

# அமைச்சரவை மாற்றங்கள்

## மாநிலங்களவை உறுப்பினர்கட்குத் தெரிவிக்கவேண்டியதில்லை

-எம். சி. சக்ளா

"நடுவண் அமைச்சரவையில் மாற்றங்கள் குறித்துச் செய்தி இதழ்களில் வெளிவந்தவை உண்மை என்றால் அவற்றை ஏன் எங்கட்கு முன் கூட்டியே தெரிவிக்கவில்லை" என்று பல உறுப்பினர்கள் மக்களவையிலும் மாநிலங்களவையிலும் கேள்விகள் எழுப்பினர். மாநிலங்களவையில் எம். சி. சக்ளா அக்கேள்விக்கு விடையளிக்கையில் நந்தாவின் பதவி விலகல் கடிதம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப் பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் அப்பதவி விலகல் கடிதத்துக்கு ஒப்புதல் அளித்த பின்னரே அமைச்சரவையில் மாற்றங்கள் குறித்துக் கூற இயலும்.

குடியரசுத் தலைவர் ஒப்புதலளிக்கும் வரை அவ்வத் துறை அமைச்சர்கள் தங்கள் தங்கள் துறைகளிலேயே. அமைச்சராகச் செயற்படுவர்" என்று கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

தலைமையமைச்சருக்கும் அவரது உடன் அமைச்சர்களுக்கும் இடையே நிகழும் நிகழ்ச்சிகள் குறித்தோ, அமைச்சர்களின் பதவி விலகல் குறித்தோ மக்களவையிலும் மாநிலங்களவையிலும் ஆய்வு நடத்த வேண்டியதின்று. இச்செயல்களில் தலைமை அமைச்சரின் செயலே முடிவானது. இவ்வுரிமைகள் அனைத்தும் தலைமை அமைச்சருக்கே உரியன. எனவே தலைமை அமைச்சர் தமது விருப்பம்போல் செய்யலாம்" எனக் கூறினார்.

## சொல்வல்லார் போட்டி

தஞ்சை, நவ 5-

சரபோசி மன்னர்க் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேரவையினரால் கல்லூரி சொல்வல்லார் போட்டி நடத்தப் பட்டது. சிறந்த சொல்வல்லார் இருவரைத் தேர்ந்தெடுக்க கூட்டம் பட்டிமன்ற முறையில் நடத்தப்பட்டது. அது போது பத்து மாணவர்களைக் கொண்ட முதல்அணி "பாரதியின் கவிதைகள் உலகினைக் கடந்தன" என்று பேசினர். அடுத்த அணியினர் "பாரதியின் கவிதைகள் உலகினைக் கடவாதன" என்று வெட்டிப் பேசினர். தமிழ்ப் பேராசிரியர் சிவஞானம் முதல் அணியிலும், தமிழ்ப் பேராசிரியர் வெங்கடாசலம் இரண்டாம் அணியிலும் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றி மாணவர்களிடையேமிகுந்த மகிழ்வை உண்டாக்கினர். இறுதியில் மாணவர் கோபாலன் முதல் சொல்வல்லாராகவும், மாணவர் தீனதயாளன் இரண்டாம் சொல்வல்லாராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலர் நன்றி நவில கூட்டம் இனிதே முடிந்தது.

## திங்களில் நகரங்கள்!

மாசுகோ, அக். 30-

"ரெட்ஸ்டார்" என்ற இதழில் மிக்கோவாய்கோலோமியெத்சு என்ற கட்டிடக் கலைஞர் எழுதியிருப்பதாவது:

"திங்களில் நகரங்களையும், வீடுகளையும் கட்டுவது குறித்துச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

"திங்கள் நகரமானது, அங்கு வாழ்பவர்களுக்குமிகப் பாதுகாப்பானது என்பதோடு மிக அழகாகவும் இருக்கும். அங்குள்ள பாறைகள் வீடுகட்ட மிக ஏற்றவை.

"திங்களில் கட்டப்படும் முதல் வீடுகள் அங்குமனிதனை அனுப்பும் ராக்கெட்டுகளாகவே இருக்கும். திங்களில் காற்றடைக்கும் அமைப்புக்களையும் நிறுவலாம். திங்கள் விதான அமைப்புள்ள வீடுகளையும் கட்டலாம். திங்களிலுள்ள குகைகளிலும், வீடுகளைக் கட்டலாம். திங்களிலுள்ள நகருக்கு "உலூனாகிராடு" என்ற பெயரிடலாம் அங்கு பல பூங்காக்களையும் கட்டலாம். சந்திரனில் எப்பொழுது வீடு கட்ட முடியும் என்று கூற முடியாது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் இந்த அற்புதம் நிகழலாம்"

# மக்களின் அடிப்படைத் தேவையை அளிக்க முடியாத ஆட்சியை அகற்ற வேண்டும்

கு. செ. து.

கோவை, நவ 9-

தமிழகமெங்கும் காங்கிரசல்லாத பிற இயக்கத்தினர் சேர்ந்து 'நவம்பர்'த் திங்கள் 6-ம் நாள்நாடெங்கும் உணவு தரவேண்டி கிளர்ச்சியும் எதிர்ப்புக் கூட்டமும் நடத்தியது அறிந்ததே.

கோவையில் தெப்பக்குளம் தெருவில் திரு. இராமச்சந்திரன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. தாலுத் பி. கே. இராமசாமி ப. சு. சின்னத்துரை முதலியோர் பேசினர். கோவை நகர்மன்ற உறுப்பினர் திரு சானகிராம் (தி.மு.க) பேசுகையில் 'காங்கிரசாட்சி 16 ஆண்டுகளாக நாட்டைச் சரியான வழியில் அழைத்துச் செல்லாமல் பெரும் முதலாளிகளையும், நிலக்கிழார்களையும் உருவாக்கி அவர்கள் காட்டிய வழியில் செல்கிறது என்றார். மேலும் அம்முதலாளிகள் தனக்கெனப் பெரும் காலிகள் கூட்டத்தை வைத்துக்கொண்டு தம்நிலையைஉறுதிப்படுத்திக் கொள்கிறார்கள்' என்றும் கூறினார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள அறிஞர் அண்ணா அவர்களின் மகிழ்வுந்தின் மீது உடுமலைப் பேட்டை திருமூர்த்தி அப்பஞ்சாலைக்கருகே கற்கள் வீசப்பட்ட (கூட்டத்திற்கிடையே தந்திமூலம் வந்த செய்தி) நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டிக் கண்டித்தார்.

இறுதியாகப் பேசிய இடதுசாரிப்பொதுவுடைமைத் தலைவர் இராமமூர்த்தி அவர்கள், "சுதந்திரக் கொடிபிடித்த மக்கள் இன்று போர்க்கோலம் பூண்டிருப்பது காங்கிரசுக் கட்சியால்தான் என்றார். ஊரில் கொள்ளையடிப்பவன் தனக்கென அடியாள் கூட்டத்தை வைத்திருப்பதைப் போல காங்கிரசார் அடிக்கும் கொள்ளைக்கு காவலர் அடியாட்களாக பயன் படுத்தப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டினர்.

"எல்லா நிலையிலும் தவறு செய்த ஆட்சியை அகற்ற வேண்டும்" என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். அதன் விளைவாகத்தான் இன்று நாடெங்கும் நடந்து வரும் போராட்டங்களின் மூல காரணமே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்தினரோ, பொதுவுடைமையினரோ அல்ல என்று மறுத்துரைத்தார்.

பின்னர் தலைவர் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

## தன்மதிப்புச் சமதரும மாநாடு

### பெரியாரின் 88வது பிறந்தநாள் விழா

நமது செய்தியாளர்

திருவாரூர் நவ. 9

இவ்வூர் பேபி திரைப்பட அரங்கில் கடலூர் கி. வீரமணி அவர்கள் தலைமையில் திரு. செல்வேந்திரன் மாநாட்டைதிறந்து வைத்தார். மாநாட்டில் பி. சி. கணேசன், பெ. எத்திராசு, ஒந்தாசி போன்றவர்கள் காமராசரைப் பற்றியும், காங்கிரசின் சாதனைகளையும் மதிப்பிட்டுப் பேசினர்கள். மாலையில் 2மணியளவில் தந்தை பெரியார் அவர்கள் தன் மதிப்புப் பற்றியும், சாதி, சமயங்கள் பற்றியும் கருத்துரை வழங்கினர்கள்.

மாலையில் இவ்வூர்ப்புகைவண்டி நிலையத்திலிருந்து பெரியார் அவர்களை ஊர்வலமாக அழைத்து வந்தனர். இறுதியில் கீழவீதியில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் தோழி, சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் 88-வது பிறந்த நாள்விழா கொண்டாடப்பட்டது. அவ்வூர் ஊராட்சி மன்றத் தலைவர் பசீர்அகமது இவ்வூரில் ஒரு கல்லூரி நிறுவவேண்டும் என்றும். அதற்குப் பெரியார் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார். கி. வீரமணி பேசுகையில் பொருளாதாரச் சமநிலையை காமராசரால் தான் கொண்டுவர முடியும். ஆகவே வருகிறபொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இறுதியில் பெரியார் அவர்கள் உரை நிகழ்த்தினர்கள். 18 ஆண்டுகால காங்கிரசின் சாதனைகளையும், காமராசு அவர்களின் தலைமையைப் பற்றியும், காங்கிரசை ஏன் வரவேற்க வேண்டும் என்பதையும் விளக்கினர். 88-வது பிறந்த தினத்தைக் குறிக்கும் வகையில் உருபா 88 அளிக்கப்பட்டது.

## உலூனா-12 திங்களைப் படம் எடுக்கிறது!

மாசுகோ, அக். 30-

உலூனா-12 என்னும் தானியங்கு நிலையம், புகைப்பட தொலைக்காட்சி உதவியால் திங்கள் பரப்பைப் படம் எடுத்துள்ளது. இப்படங்கள் மாசுகோ தொலைக் காட்சி காட்டப்பட்டன.

இங்குக் காட்டப்பட்ட இரு படங்களும், அக்டோபர் 25இல் திங்களைச் சுற்றிவந்த உலூனா-12 ஆல் எடுக்கப் பெற்றவையாகும். திங்களைச் சுற்றிக் கொண்டிருக்கும் உலூனா-12 பூமிக்குப் படங்களை அனுப்பிக் கொண்டிருக்கும்.

அக்டோபர் 29 ல் கிடைத்த தகவல்படி உலூனா-12 திங்கள் பரப்புக்கு 100 கிலோ மீட்டர் அருகிலும், 1740 கிலோ மீட்டர் தொலைவிலும் சுற்றிக் கொண்டிருந்தது.

இவ்வாண்டு பிப்ரவரி மாதம் உலூனா-9 திங்களில் இறங்கியபொழுது, திங்கள் பரப்பைப் பற்றிய முதற் படங்கள் நமக்குக் கிடைத்தன. திங்களிலிருந்து படங்களைப் பெறுவதற்காக, உலூனா-12 உடன் மேற்கொண்டு வானொலித் தொடர்புகள் ஏற்படுத்தப்படும்.

## உழவர்கட்கு அன்பளிப்பு

### உரு. 3 கொடுக்கின்றனர்

தஞ்சை, நவ. 9-

இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் எங்கும் 'குறுவை' அறுவடையாகின்றது. சப்பானிகா (Japanica Indicapaddy) இண்டிகா என்ற புதுவகை நெல்லை மிகுந்த அளவில், உழவர்கள் அரசினர் அறிவுரையின் பேரில் பயிரிட்டனர். இது நல்ல விளைச்சலைத் தந்துள்ளது. மாவிற்கு 20, 22 கலம் வரை விளைச்சல் ஏற்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட வெள்ளத்தால் சில பகுதிகள் பாதிக்கப்பட்டன. எனினும் அங்கெல்லாம மாவிற்கு 15 கலம் கண்டுள்ளது.

நெல்கொள்முதல்:-

அரசாங்க இசைவு பெற்ற வணிகர்கள் குறுவை நெல் கொள்முதல் செய்கின்றனர். இவர்கள் கொள்முதல் செய்த நெல்லை அரசிடம் மட்டும்தான் கொடுக்க வேண்டும். அதனை வேறு எங்கும் அவர்கள் விற்பனை செய்ய இயலாதவாறு அரசினர் வழி வகுத்துள்ளனர். அரசினர் அனுமதி பெற்ற வணிகர்களிடம் உழவர்கள் நெல்லை விற்றால், ஒரு குயிண்டாலுக்குரிய கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு (Control rate) மேல் ஊதிய அன்பளிப்பாக (Bonus) அரசு உரு 3 கொடுக்கின்றனர். அத்துடன் அதனைக் கொள்முதல் செய்து தரும் வணிகர்களுக்கு ஒரு குயிண்டாலுக்குஉரு 1 ஒன்று ஊதிய அன்பளிப்பாக அரசு அளிக்கின்றது.

விலை

| | |
|---|---|
| ஒரு மூட்டை (57 கிலோ) கொள்முதல் விலை | ரு 25-65 |
| அரசினர்தரும் அன்பளிப்பு | 1-71 |
| உழவர் பெறும் தொகை | ரு 27-36 |
| ஒரு குயிண்டால் (100 கிலோ) விலை | ரு 45-00 |
| குயிண்டாலுக்கு அன்பளிப்பு | ரு 3-00 |
| உழவர் பெறும் தொகை | ரு 48-00 |

## தேர்தல் களத்தில்

### யார்? யார்? எங்கு?

முசுலிம்லீக் வேட்பாளர்கள்:-

தமிழ்நாடு முசுலிம் லீக் குறைந்த அளவுத் திட்டத்தின் அடிப்படையில் தி. மு. க-சுதந்திரா கட்சிகளுடன் கொண்டுள்ள தேர்தல் உடன்பாட்டின் அடிப்படையில் தீர்மானித்துள்ள தொகுதிகளும் வேட்பாளர்கள் பெயர்களும் இப்பொழுதுதெரியவந்துள்ளன

சட்டமன்றத் தொகுதிகள்:

திருநெல்வேலி மேலப்பாளையம்: கே. பி. செய்குத்தம்பி (சென்னை மாவட்ட முசுலிம் லீக் துணைச் செயலர்)

திருச்செந்தூர்: பி. எச். எம். அப்துல் காதர் (சென்னை மாவட்ட முசுலிம் லீக் துணைத்தலைவர்)

தென்காசி: எசு. எம். அப்துல்கை (நெல்லை மாவட்ட முசுலிம் லீக் துணைச் செயலர்)

சென்னை ஆயிரம் விளக்கு: எ. சு. ர. காசா மொகைதீன் (சென்னை மாநகரவை முசுலிம் லீக் தலைவர்)

துறைமுகம்: டாக்டர் அபில்லாபேக் (முன்னாள் துணை மாநகரவைத் தலைவர்)

இராமநாதபுரம்: எம். கே. ஈ மௌலானா (மாவட்ட முசுலிம்லீக் தலைவர்)

இளையாங்குடி: பி. என். ஐ. அபுதாலிப் (சென்னை மாவட்டத் துணைச் செயலர்)

பாபநாசம்: யூசுப் சாகிப் மரைக்காயர் (மாநில லீக் துணைத் தலைவர்)

குற்றாலம்: வலங்கைமான் அப்துல்லா (தஞ்சை மாவட்டத் துணைச் செயலர்)

வடஆற்காடு:

இராணிப் பேட்டை: எம். எம். அபிபுல்லா [மேலூர்நகரத்துணைத்தலைவர்



## அன்பர் அஞ்சல்

### காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ

அன்புடையீர்,

அண்மையில் 'யூனிட்டிகிளப்' குழுவினரால் சென்னையில் "காரணம் கேட்டுவாடி" என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்தில் தற்கொலை செய்யப்போகும் பலரைக் காப்பாற்றுவதாக ஒரு காட்சி வருகின்றது. இதில் ஒரு தமிழ் நடிகை [மனோரமா] ஓரிடத்தில் "வயிற்றுவலியால் செத்தானோ குடும்பத் தொல்லையால் பெட்ரோல் ஊற்றிச்செத்தானோ தெரியவில்லை, சுற்றியிருப்போர் முழக்கங்கள் போட்டு அவனை உரிமை வீரனாக ஆக்கி விடுகிறார்கள்" என்று பேசுகிறாள்.

இந்த இழிவான உரை மந்திமொழியாம் இந்தி அரியணை ஏறுவதை எதிர்த்துத் தீந்தமிழைக் காக்கத் தீக்குளித்தத் தங்கங்களைக் கேலி செய்வதாக உள்ளது. அதை உணர்ந்த பின்னரும் தமிழ் நடிகை இதனைப் பேசியுள்ளார். தமிழ் நாட்டிலேயே தமிழ்த் திரையை நம்பிவாழும் இவர்கட்கு என்ன இறுமாப்பு? அந்நடிகை இதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இந்நாடக ஆசிரியர் ஆனந்த் என்பவரும் இதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். தமிழையே நம்பிப் பிழைக்கும் அவர், தமிழ் உரிமை வீரர்களைப் பழிப்பதா? இதுபற்றித் "தமிழ் நலம் நாடுகிறோம்" என்று கூறும் ஒரு செய்தி இதழும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

(முரசொலியைத்தவிர)

நாடகம் வளர்க்க நல்ல கருத்துக்கள் கிடைக்க வில்லையா? கல்லறைக்குச் சென்றுவிட்ட கவின் தமிழ் வீரர்களைத்தான் கேலி செய்யவேண்டுமா? இந்நாடகத்தை உருவாக்கிய பெரிய திரைப்படக் குழுவும் இதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

தமிழ் உரிமை வீரர்களைப் பழித்தல் தமிழைப்பழிப்பது போலாகும். "தமிழைப்பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேல் என்றார் பாவேந்தர். இதற்காக இவர்கள் மன்னிப்புக் கேட்கவில்லையென்றால்...

இவ்வண்,
மதுரை இந்தி எதிர்ப்பு
மாணவர் குழு
மதுரை.

## "குறள்நெறி" நாளிதழ் உதவி நிதி

### நன்கொடை அளித்தோர் பட்டியல்:

புலவர் ஆ. வெ. இராமசாமி,
வைரிசெட்டிபாளையம் ... 5-00

நன்கொடை அளித்தோருக்கு நன்றி. அன்பர்கள் அவரவர்களால் இயன்றவாறு உதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். —ஆசிரியர்.

மதுரை: 11—11—66 வெள்ளி

# குறள்நெறி

வெளியீடு: 12—11—66 சனி

## முதலமைச்சரின் வேண்டுகோள்

சென்னை, நவ. 9-
தமிழக முதலமைச்சர் எம். பக்தவத்சலம் அனைத்திந்திய வானொலித்துறை அலுவலர்களிடம் "அன்றாட விலைப் பட்டியலை நாள்தோறும் வானொலியில் அறிவிப்பதைக் கைவிடுமாறு தாம் வேண்டிக் கொண்டதாக இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்" இவை உண்மைக்கு மாறாக இருப்பதே இதற்குக் காரணம் என்று அவர் கூறினார்.

சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போதே அவர் இங்ஙனம் கூறினார். அவ்வறிக்கையில் அடங்கியுள்ள பெரும்பான்மையான பொருட்கள் விலைக் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதனால் இவ்வறிக்கை தேவையற்றது எனத் தாம் கருதுவதாகவும் அவர் கூறினார்.

அனைத்திந்திய வானொலியில் அறிவிக்கப்படும்விலைகள் உண்மை விலைகட்கு மாறானவையாக இருப்பதாகச் சட்டமன்ற உறுப்பினர் சிலர் குறை கூறிய போதே அவர் இங்ஙனம் குறிப்பிட்டார்.

—✶—

## சேலம் உருக்காலை பற்றி மாணவர் அறிவிப்பு.

சென்னை, நவ, 9
இங்கு கூடிய சென்னை மாணவர்குழு சேலம் உருக்காலையை விரைவில் அமைக்க வேண்டுமென்பது குறித்துத் தலைமை அமைச்சர், முதலமைச்சர் இருவருக்கும் ஒரு வேண்டுதல் விண்ணப்பம் விடுக்க வேண்டுமென முடிவு செய்தனர்.

நகரிலுள்ள ஏழு கல்லூரிகளிலிருந்து மாணவர் சார்பாளர்கள் இக்கூட்டத்தில் பங்கு கொண்டனர்.

தங்கள் வேண்டுகோளை வலியுறுத்தும் வகையில் எவ்விதமான கிளர்ச்சியிலோ, வேலை நிறுத்தத்திலோ பங்கு கொள்வதில்லை எனவும் இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

### சேலம் உருக்காலை

## தமிழக அரசுக்குத் தஞ்சை மாவட்ட மாணவர் குழுவின் முன்னறிவிப்பு

நேற்று (6-11-66) இரவு 7 மணிக்கு இங்கு 'தஞ்சை மாவட்ட மாணவர் குழுவின்' செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. தஞ்சை மருத்துவக் கல்லூரி, சரபோசி மன்னர் கல்லூரி, புட்பம் கல்லூரி, புலவர்கல்லூரி,கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரி, மற்றும் மாயூரம், அதிரை கலைக் கல்லூரிகள் ஆகியவற்றின் மாணவர் சார்பாளர்கள் கலந்துகொண்டனர்.குழுத்தலைவர் திரு. பாலுவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள் :**

1. சேலம் உருக்காலைத்திட்டம் மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டத்திலேயே சேர்க்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் என்னகாரணத்தாலோ நான்காம் திட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டது. இப்போது நீக்கப்பட்டுள்ளது. இதன் தேவையினையும், இன்றியமையாமையினையும், நிபுணர்களும் பொதுமக்களும் அரசியல் தலைவர்களும் பன்முறை வற்புறுத்தியும், பொருந்தாத காரணங்களைக் காட்டி இது காறும் தள்ளிப்போட்டுக் கொண்டிருந்த நடுவணரசிற்கு, தமிழக அரசும் தலையாட்டியது, மாறாக உறுதிமொழிகளையும், வாக்குறுதிகளையும் தமிழக மக்களுக்கு மாநில அரசு தந்தவண்ணம் உள்ளது. மாநில அரசு தாம் எடுத்து நடத்துவதாகக் கூறுவதே சேலம் உருக்காலை இல்லை என்பதற்கு தக்கசான்றுபகருகின்றது. மேலும்ஆந்திராவில் மாணவர்களும், பொதுமக்களும் கிளர்ச்சி செய்த பின்னரே, விசாகப்பட்டினம்உருக்காலைக்குச் ஒப்புதல் தெரிவித்துள்ளது நடுவணரசு.அதைப் போன்றே போராட்டத்தால் தான் சேலம் உருக்காலை கிடைக்கும் என்ற நிலையினை கட்டாயத்தினை மாநில அரசும் நடுவணரசும் உண்டாக்குமாயின் மாணவருலகம் எந்த விலை கொடுத்தும் அதனைப் பெறத் தயாராக இருக்கிறது.

அத்தோடு, உண்ணாநோன்பையும், கிளர்ச்சியையும்காரணம் காட்டி உருக்காலையைப் பெற முயன்ற ஆந்திர முதலமைச்சரின் சதுரப்பாட்டைத் தமிழக முதலமைச்சர், கிளர்ச்சிக்கு முன்னதாகவே பெற்று தமக்கேயுரிய அரசியல் சூழ்ச்சியை இதன் மூலமாவது வெளிக்காட்டுவார்என்று ஆர்வத்தோடுஎதிர்பார்க்கிறது.

2. இம்மாதம் 20-ஆம் நாளன்று மாவட்டக் குழுவின் பொதுக்கூட்டம் நடத்துவது.

3, அன்றே இவ்வாண்டின் புதிய மாணவர் சார்பாளர்களினின்றும் தலைவர் செயலர் முதலியவர்களைத்தேர்ந்தெடுப்பது.

இங்கு முடிவெடுக்கப்பட்ட முதல் தீர்மானத்தை மாணவர் தலைவர் பாலு கையெழுத்திட்டு தலைமையமைச்சருக்கும்உருக்காலை(தொழில்) அமைச்சருக்கும் தமிழக முதலமைச்சருக்கும் இன்று அனுப்பியுள்ளார்.

...0...

## கம்பிச் செய்திச் சுருக்கம்

மாசுக்கோ, நவ. 7—
இஃசுடாலின் வீழ்ச்சிக்குப் பின் இஃசுடாலின் முகத்தைத் தொலைக்காட்சியில் உருசிய மக்கள் முதல் முறையாகச் சென்ற சனியன்று பார்த்தனர். 1941 நவம்பர் 7-ம் நாள் படை அணிவகுப்பில் இஃசுடாலின் பங்கு கொள்வதைக் கண்டனர், வொரோஃசிலோவ், புதென்னி ஆகிய இரு தளபதிகளுக்கிடையில், இலெனினின் கல்லறையிலிருந்து அவர் ஐந்து விநாடி பார்வையிடக் கண்டனர்.

## கூட்டுறவு வார விழா

(கு. செ. து)

புதுச்சேரி நவ. 6-
புதுச்சேரியில் நடைபெற்ற அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவில் புதுவை மாநிலக் கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. ந. கோவிந்தசாமி அவர்களின் தலைமையில் புதுவை கூட்டுறவுத் துறைப் பதிவாளர் திரு. எ. எசு. நடராசன் மற்றும் சிலர் பேசினர்.

தலைவர் பேசும் போது அகவிலை உயர்வைத் தடுக்கவும், சுரண்டல்களை ஒழிக்கவும் நாம் கூட்டுறவை உறுதுணையாய்க்கொண்டுஉய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இன்று இங்கு நடந்த கூட்டுறவு வார விழாவில் கூட்டுறவாளர்கள், "44-வது அனைத்து உலகக் கூட்டுறவு நாளன்று கூடியுள்ள நாம் எல்லோரும் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கும் பொருளாதார நல்வாழ்வுக்காகவும் பாடுபடுவதாகவும் பல்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்களைத் திறம்பட நடைபெறச் செய்வதன் வாயிலாகத் தொழில் வளத்தைப் பெருக்கி மக்கள் நல்வாழ்வு வாழத் தங்களாலானதைச் செய்வதாகவும் உரிமை, சமநிலை, நேர்மை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு உலக அமைதிக்குப் பாடுபடுவோம்" என்று உறுதி எடுத்துக் கொண்டனர்.

## மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகை

ஐதராபாத் நவ–9.
இங்கிருந்து ஐம்பது மைல் தொலைவிலுள்ள நல்கொண்டாவில் தடுப்புக்காவல் சட்டத்தையும்மீறி ஊர்வலமாகப் புறப்பட முயன்ற மாணவர்கள் மீது காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர்.

நார்க்கெட் பள்ளியில் கைது செய்யப்பட்ட சில மாணவர்களை விடுதலை செய்ய வேண்டியும், விசாகப்பட்டினத்தில் எஃகாலை அமைப்பதற்கு வலியுறுத்த வேண்டியும் இம் மாணவர்கள் ஊர்வலம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்ததாகத் தெரிகிறது,

ஐதராபாத் மாவட்ட முழுமையும் உள்ள கல்வி நிலையங்கள், அடுத்து அறிவிக்கும் வரை மூடப்படவேண்டுமென ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மாணவர்களின் தொடர்ச்சியான உண்ணா நோன்பு இன்று எட்டாவது நாளாக நீடிக்கிறது. முதலமைச்சர் பிரமானந்த ரெட்டியின் பிறந்த இடத்தைச் சேர்ந்த ஒரு மாணவியும் அவளது உடன் பிறந்தோரும் "முதலமைச்சர் பதவி விலக வேண்டும்" என்பதற்காக உண்ணா நோன்பு மேற்கொண்டுள்ளனர்.


## "குறள்நெறி" நாளிதழ்

தனி இதழ் விலை காசு 6.

அஞ்சல் வழியாகப் பெறுவதற்குத் திங்கள் கட்டணம் உரு. 2-50

ஆண்டுக்கட்டணம் உரு. 25-00

புரவலர் கட்டணம் உரு. 1000-00

விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விளம்பரங்கள் பெற்று அனுப்புவோர்க்கு 25°/. கழிவு உண்டு.

"குறள் நெறி" திங்களிருமுறை : தமிழ் :

தனி இதழ் விலை 25 காசு.

ஆண்டுக் கட்டணம் உரு. 6-00

இரண்டாண்டுக் கட்டணம் உரு 10-00

புரவலர் கட்டணம் உரு. 100-00

"குறள்நெறி" திங்களிருமுறை : ஆங்கிலம்:

தனி இதழ் விலை 20 காசு.

ஆண்டுக் கட்டணம் உரு. 5-00

ஊர்கள் தோறும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

விவரங்கட்கு:

ஆசிரியர்
'குறள்நெறி'
திருப்பரங்குன்றம்
மதுரை–5


வெளியிடுபவர் டாக்டர் சி. இலக்குவனார். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம், திருப்பரங்குன்றம், மதுரை 5. தொலைபேசி 8-65